# Siddhargal Thiruvadi e-Newsletter

"SERVICE TO SOUL is SERVICE TO GOD"

*(This is a Bi-Monthly private circulation not for sale and completely free of cost )*

**Issue : 02 : 2024**
**APRIL 01—15, 2024**

Regd No. 117/2023 under Indian Trusts Act, 1882, Indian Income Tax Act, 1977 and NGO Darpan No. TN/2023/037227

24-A, 1ST MAIN ROAD, TROPICAL AVENUE, VEDHACHALAM ST, RAGAVENDHRA NAGAR, PALLIKARANAI, CHENNAI—600100

## இந்த இதழில்...


- ஆத்தூர் ஸ்ரீ விவேகானந்த சித்தர்
- ஏப்ரல் மாத குருபூஜை தகவல்கள்
- ஸ்ரீலஸ்ரீ குகைபெருமாள் சுவாமிகள்
- காஞ்சிபுரத்தில் உருவாகும் 18 சித்தர்கள் பீடம்


**Editor**
Siddhargal Thiruvadi "Gunnu"
**Co-Editor**
S. Surya Narayanan
**Contact Mobile**
+91 8438238921
**Email:**
siddhargalthiruvadisevatrust@gmail.com
**Website**
www.siddhargalthiruvadi.com



## ஆத்தூர் ஸ்ரீ விவேகானந்தர் சுவாமிகள்

தேனி மாவட்டம் சின்னமனூரில் பிறந்தவர் ஸ்ரீ விவேகானந்த சித்தர், இவர் சிறு வயது முதலே ஆன்மீகத்தில் மிகுந்த நாட்டம் கொண்டிருந்தார். இல்லற வாழ்வின் மூலம் இவருக்கு நான்கு பெண் குழந்தைகளும், இரண்டு ஆண் குழந்தைகளும் உள்ளனர். இவர் குடும்ப வாழ்க்கையை விட ஆன்மீக பாதையில் அதிக நாட்டம் கொண்டிருந்ததால், தொடர்ந்து கோவிலுக்குச் சென்று இறை வழிபாட்டில் கவனம் செலுத்தினார். பிறகு செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள சிங்கப்பெருமாள் கோயிலுக்கு வந்து சுமார் நான்கு மாத காலம் தங்கி இறை வழிபாட்டை மேற்கொண்டார். அதன் பிறகு, தனது நண்பருடன் கொல்லிமலை சென்று திரும்புகையில் உளுந்தூர்பேட்டையில் உள்ள ஸ்ரீ சங்கரலிங்க சுவாமிகளை சந்தித்தார். ஸ்ரீ சங்கரலிங்க சுவாமிகள் இவரை பார்த்தவுடன் 'வாயா' என அழைத்து, தனது கையை காட்டி ஜாதகத்தைப் பார் என கூறுகிறார். இவரும் மறுப்பேதும் சொல்லாமல் உடனடியாக அவருக்கு ஜாதகம் பார்க்கின்றார். பிறகு ஸ்ரீ விவேகானந்தர் சுவாமிகளோ நாம் ஜாதகம் பார்ப்பது இவருக்கு எப்படி தெரியும் என்ற ஐயம் ஏற்படுகிறது. அவருக்குள் ஏதோ ஒரு ஞானம் உள்ளது என்பதினை அறிந்துகொள்கிறார். தனது விருப்பப்படி, ஸ்ரீ சங்கரலிங்க சுவாமிகளை குருநாதராக ஏற்று அங்கேயே சுமார் ஆறு ஆண்டு காலம் தங்கி குருநாதருக்கு பணிவிடை செய்து வந்தார்.

## குருவுக்கு கோவில்

தனது குருநாதர் ஸ்ரீ சங்கரலிங்க சுவாமிகள் ஜீவசமாதி அடையும் வரை அவருக்கு சேவை செய்து வந்தார். தனது குருநாதரின் ஜீவ சமாதிக்கு பிறகு, அங்கு ஆன்மீக சேவை தொடர்ந்துச் செய்யும் சூழ்நிலை இல்லாத காரணத்தினால், அங்கு வந்த பக்தர்கள் அவரை சேலம் அருகேயுள்ள ஆத்தூருக்கு அழைத்து வந்தனர். முதன்முதலில் அவர் முள்ளுவாடி என்ற கிராமத்தில் குடியேறினார்.



ஆத்தூர் ஸ்ரீ விவேகானந்தர் சுவாமிகள்

பின்பு காந்தி நகரில் சுமார் இரண்டு ஆண்டு காலம் தங்கி இறைச்சேவை செய்தார். பிறகு தளவாய்பட்டியில் உள்ள ஒரு மடத்தில் சுமார் ஆறு மாத காலம் வசித்து வந்தார். நீண்ட கால யோசனைக்குப் பிறகு, தனது குருநாதருக்கு ஒரு ஆலயம் எழுப்பலாம் என முடிவு செய்தார். எனவே ஆத்தூரில் இருந்து பெரம்பலூர் செல்லும் வழியில் சுமார் இரண்டு ஏக்கர் பரப்பளவில் ஒரு இடத்தை வாங்கி அதில் ஆலயம் எழுப்பி சேவையும் செய்து வணங்கி மேலும் அங்குள்ள ஆலயத்தில் பல பூஜைகளும் வழிபாடுகளும் நடத்தி வந்தார் அதில் நவசண்டி ஹோமம் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. இங்கு நடக்கும் அனைத்து பூஜைகளையும் வழிபாடுகளையும் சுவாமிகளே முன்னின்று நடத்திவந்தார். மாதந்தோறும் வரும் பௌர்ணமி நன்நாளில் மகாலட்சுமி யாகம் வளர்த்து அனைவரும் செல்வ செழிப்புடன் வாழ இறைப்பணி செய்து வந்தார். அங்கு செய்யப்படுகின்ற மகாலட்சுமி யாகம், தமிழ்நாட்டிலேயே மிகவும் தனித்துவம் வாய்ந்தது என்று ஸ்ரீ விவேகானந்தர் சித்தர் அடிக்கடி குறிப்பிடுவார்.

## மஹாலக்ஷ்மி யாகம்

இந்த மகாலட்சுமி யாகத்தில் கலந்துக் கொள்பவர்களுக்கு நிகழ்கால துன்பங்கள் மற்றும் கடந்த கால கெட்ட கர்மாக்கள் அனைத்தும் நீங்கி புத்துணர்வு ஏற்படுமாம். மேலும் இங்கு நடைபெறும் பிரதி மாத அமாவாசை பூஜை வெகுச் சிறப்பாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மற்றொரு சிறப்பு அம்சம் என்னவென்றால், இந்த ஜீவ ஆலயத்தில், இருபத்தி ஏழு நட்சத்திரத்திற்குரிய மரங்கள் உள்ளது. அவரவரது நட்சத்திரத்தன்று அந்த மரத்தை வழிபட்டு வணங்கினால், கெட்ட கர்மாக்கள் நீங்கும். மேலும் தொழிலில் நஷ்டம், திருமணத் தடை, குழந்தை பாக்கியம், கணவன்-மனைவி குடும்பத் தகராறு போன்ற அனைத்திற்கும் இந்த வழிபாட்டின் மூலம் நிவர்த்தியாகிறது .


## இஷ்ட தெய்வங்கள்

இந்த ஜீவ ஆலயத்தின் அருகே ஸ்ரீ காரிய சித்தி ஆஞ்சநேயர் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இது ஒரு மலை அடிவாரத்தில் உள்ள ஆஞ்சநேயர் என்பதால் பரிகார பூஜைகள் இங்கு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதே போல், தனது குருவான ஸ்ரீ சங்கரலிங்க சாமிகளுக்கு ஒரு குடில் அமைத்து தொடர்ந்து நித்திய பூஜைகள் நடைப்பெற்று வருகிறது. இந்த ஆலயத்தின் மற்றொரு தெய்வமாக ஸ்ரீ நாக கன்னி அம்மன் பிரிதிஷ்டை செய்து வழிபாடு செய்யப்பட்டு வருகிறது. இந்த அம்மன் சிலை இருக்கும் பகுதி ஒரு மலைப் பகுதி என்பதால் வெளியூர் பக்தர்களும், சிவனடியார்களும் அதிக அளவில் இங்கு வந்து தங்கி தியானம் செய்கின்றனர். இங்கே வந்து வழிபட்டு செல்லும் அனைத்து பக்தகொடிகளுக்கும் தினந்தோறும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டுத்தோறும் ஸ்ரீ விவேகானந்தர் சுவாமிகளின் மகா குருபூஜை பங்குனி மாதம் 26ந்தேதி வெகுச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. வாழ்நாளில் ஒருமுறையேனும் சேலம் அருகே உள்ள ஸ்ரீ விவேகானந்தர் சுவாமிகளின் ஜீவ சமாதி மண்ணை மிதித்தால் போதும் உங்கள் வாழ்க்கையில் உள்ள கடினமான தருணங்களை மாற்றி, நேர்த்தியாக வாழ வழிச்செய்வார். இதனை நாங்கள் அனுபவ பூர்வமாகவே உணர்ந்து சொல்கிறோம் என்கிறார்கள் ஊர்மக்கள். இதுவரை இந்த ஜீவ ஆலயம் 140 பௌர்ணமி பூஜைகளை கடந்து சென்று கொண்டிருக்கிறது. நீங்களும் ஸ்ரீ விவேகானந்தர் சித்தர் சுவாமிகளை வணங்கி அருளைப் பெற்றுச்செல்லுமாறு சித்தர்கள் திருவடி சேவா அறக்கட்டளை தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறது.



உளுந்தூர்பேட்டை மகான் ஸ்ரீ சங்கரலிங்க சுவாமிகள்

ஜீவசமாதி ஆலய முகவரி :
**ஸ்ரீ விவேகானந்தர் சித்தர் ஜீவ சமாதி**
தெற்கு காடு,
கோவர்த்தனகிரி மலையடிவாரம்
ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம்
அலைபேசி : 9042733387




## இளமைப்பருவம்

பொள்ளாச்சியில் அருகே அர்த்தநாரி பாளையம் என்ற ஊரைச் சேர்ந்த திரு. இராமசாமி – திருமதி. காளியம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர் தவத்திரு ஸ்ரீ குகைப்பெருமாள் சுவாமிகள். சுவாமிகளுடன் உடன்பிறந்தோர் ஐந்து சகோதரர்களும், ஒரு சகோதரியும் ஆவர். சிறுவயதில் சக மனிதர்களைப் போல வாழ்ந்தவர் தான் சுவாமிகள். விவசாய கூலி வேலைக்குச் சென்று வந்த போது உழவு ஓட்டுவது, ஏர் பிடிப்பது, தண்ணீர் இறைப்பது என அனைத்து விவசாய வேலைகளையும் அறிந்தவராய் எந்த வேலையாயினும் அதனை ஏற்று செய்து வந்தார். ஊரின் மேற்குப் பகுதியில் தாடகைமலை என்ற மலையின் மீது அன்னை தாடகை நாச்சியார் கோவில் கொண்டுள்ள அந்த அம்பிகையின் மீது அளவு கடந்த பக்தி கொண்டிருந்தார் சுவாமிகள்.

வயல்வெளியில் சக பணியாளர்களிடம் "*நீங்கள் எல்லாம் ஏர் பூட்டுங்கள். அதற்குள் நான் அம்மாவிடம் சென்று வருகிறேன்*" என்று சொல்லி விட்டுச் செல்வார்களாம். அம்மாவிடம் செல்வதாகச் சொல்வது மலை மீது உள்ள தாடகை நாச்சியாரை தரிசிக்கச் செல்வது என யாருக்கும் புரியாது. சுவாமிகள் அருள் வாக்கில் அன்னையைத் தரிசிக்கச் செல்வதை எவரும் உணர்ந்ததில்லை. மலையின் மீது காற்று வேகத்தில் சென்று தரிசனம் செய்து விட்டுத் திரும்பி வந்து விடுவார்களாம்.

## துறவறம்

ஸ்ரீ குகைப்பெருமாள் சுவாமிகளுக்குச் சிறு வயதிலேயே அருள் வழியில் நாட்டமாக இருந்ததை அறிந்திடாத அவரது பெற்றோர் சுவாமிகளுக்கு வேட்டைக்காரன் புதூரில் வள்ளியம்மை என்னும் பெண் ஒருவரை மணமுடித்து வைத்தனர். ஆனால் சுவாமிகளோ இல்லற வாழ்வில் நாட்டமின்றி அருட்திரு வள்ளலார் வழியில் இல்வாழ்வைத் துறந்து தவ வாழ்வை மேற்கொண்டவர், சில காலத்தில் மனைவி காலமானதைக் கூட பொருட்படுத்தாதவராக ஞானத் தேடலில் தன்னை மறந்தார்கள்.

## ஆன்மீகத் தேடல்

உளுந்தூர்ப்பேட்டையில் ஸ்ரீ சர்வேஸ்வரா சித்தர் அவர்களுக்குத் தன் தவ ஆற்றலால் வெறும் நான்கு நாட்களில் நீண்ட ஜடா முடியும், நீண்ட தாடியும் வளர்ந்ததாக அறியக் கிடைத்தது. அவரைப் போலவே ஸ்ரீ குகைப்பெருமாள் சுவாமிகளுக்கும் நான்கு நாட்களில் நீண்ட ஜடாமுடியும், தாடியும் வளர்ந்ததாம். அந்தச் சம்பவமே சுவாமிகளைச் சித்தர் எனவும், சிறந்த தவச்சீலர் எனவும் மக்களுக்கு அடையாளப்படுத்தியது எனலாம். செட்டிபாளையத்தில் சிறிய குடில் அமைத்துத் தங்கித் தவம் இயற்றி வந்த போது அவரது குடிலைச் சுற்றிலும் பாம்புகள் சூழ்ந்து காவல் இருக்கத் தவம் செய்து இருந்திருக்கிறார்கள். அதன் பின் தொண்டாமுத்தூர் மற்றும் பழனி சென்ற பின் அங்கிருந்து நேராகக் காசி சென்று தவம் இயற்றினார் சுவாமிகள். காசியில் இருந்து அர்த்தநாரிபாளையத்திற்குத் திரும்பி வந்தவர் பெரும் காட்டுப்பகுதியாக இருந்த அவ்விடத்தில் 'சில்பா மரம்' என்னும் ஒரு வகை மரத்தின் கீழ் கற்களினால் குகை போன்று ஒரு அமைப்பை ஏற்படுத்திக் கொண்டு அதனுள் அமர்ந்து தவம் இயற்றத் தொடங்கினார்கள். சுவாமிகள் தவம் இயற்றும் போது, குகைவெளி வரை அவரது ஜடா முடி நீண்டு கிடக்குமாம். குகைக்குள் இருந்து இவ்விதம் தவம் இயற்றி வந்ததால் குகைச் சாமி, குகைப்பெருமாள் சுவாமிகள் என்று மக்கள் பெயரிட்டு அழைத்து வந்தனர்.

## சித்து விளையாட்டுக்கள்

சுவாமிகளைத் தேடி வந்து மக்கள் தாமாக உணவு கொடுத்தால் அன்றி உணவைக் கேட்டுப் பெற மாட்டார்களாம். அருகில் இருக்கும் சில மூலிகைகளைப் பறித்து உண்டும், கற்றாழைச் செடியிலிருந்து கற்றாழையைப் பிடுங்கி அதனையே

உணவாக உட்கொண்டு வந்தார்கள். அதனைக் கண்ட ஒருவர், "கற்றாழையை எப்படி உண்ண முடிகிறது?" என்று கேட்டதற்குத் தான் கடித்து உண்ட கற்றாழையைத் தர அது தேன் போல இனித்ததாம். சுவாமிகள் ஆற்றங்கரையில் கடும் வெயிலில் சுடு மணலில் படுத்திருப்பார்களாம். வயல்களில் தானியங்களைப் பயிரிடச் செல்லும் போது சுவாமிகள் எதிர்ப்பட்டால் அந்த வருடம் வயலில் விளைச்சல் செழிப்பாக இருக்கும் எனும் நம்பிக்கை மக்களிடையே இருந்து வந்தது. இவ்வூரில் மக்கள் கால்நடைகளுக்கு ஏதேனும் நோய் ஏற்பட்டால் சுவாமிகளைத் தேடி வருவார்களாம். சுவாமிகள் "அது ஒன்னும் பண்ணாது போ"என்று தான் சொல்வார்களாம். அதுவே அருள் வாக்காக மாறி கால்நடைகள் நோயிலிருந்து மீண்டு வருமாம். அது போல, மாடுகள் கன்று ஈன்றவில்லை என்றாலும், ஆடுகள் குட்டி போடவில்லை என்றாலும் அவர் மந்திரித்துத் தரும் தண்ணீரை வாங்கி வந்து அவற்றின் மீது தெளித்தால் போதும் கால்நடைகள் குட்டி ஈன்றும் அதிசயம் நிகழும் என்கின்றனர் ஊர் மக்கள்.

சுவாமிகள் சித்து நிலையை அடைந்த பிறகு உணவு உண்பதை முற்றிலும் நிறுத்தி விட்ட போது மக்கள் உணவு படைத்தால் அதனை எடுத்துக் காக்கைகளுக்கு உணவாக இரைப்பாராம். அதனால் அவரைச் சுற்றிலும் எப்போதும் காக்கைகள் பறந்து வருவதோடு அவரது தோள் மீதும் சுவாமிகள் உண்ணவிருக்கும் உணவின் மீதும் வந்து அமர்ந்து கொள்ளுமாம். சுவாமிகள் பழனியில் உள்ள ஸ்ரீ சிவானந்த பரமஹம்சரிடம் சீடராகச் சேர்ந்து பல சித்து வேலைகளைக் கற்றுத் தெளிந்தார்கள்.



சுவாமிகளுடன் உடன் இருப்பவர்கள் பழனிக்குச் செல்ல அழைத்தால், "நீங்கள் முன்னே செல்லுங்கள். நான் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு அவர்களுக்கு முன்னதாகவே பழனி மலையின் மீது ஏறி சுவாமி தரிசனம் செய்து விட்டுக் கீழே இறங்குவார்களாம்.



சித்தர் சுவாமிகள் வானில் பறந்து செல்லும் வித்தையையும், தண்ணீரில் நடக்கும் சித்து விளையாடலையும் அறிந்திருந்தார்கள். தாடகை மலை, வெள்ளியங்கிரி மலை, கயிலை மலை அனைத்திற்கும் கண்ணுக்குத் தெரியாத சூட்சும நிலையில் சென்று வருவார்களாம். சுவாமிகளின் சித்து விளையாடல்களை அறிந்தவர்கள் அவரிடம் சீடர்களாக ஆனார்கள். சுவாமிகள் ஒரே நேரத்தில் பல்வேறு இடங்களில் காட்சி தருவார்களாம். தன் வாழ்நாள் முழுவதும் மக்களுக்காகச் சேவை செய்து வந்த சுவாமிகள், ஜாதி மதம் பாராது அனைத்துத் தரப்பினரும் ஒற்றுமையோடு இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்தார்கள்.

## ஜீவ சமாதி

ஸ்ரீ குகைப்பெருமாள் சித்தர் சுவாமிகள் 1954 ஆம் ஆண்டு பங்குனி மாதம் திருவோணம் நட்சத்திரத்தில் ஜீவ முக்தி அடைந்து சிவ ஜோதியுள் ஒன்றிணைந்தார்கள். அந்த ஊர்மக்கள் தற்போது வரை அறுவடை செய்யும் பயிர் வகைகளைக் சுவாமிகளுக்குச் சமர்ப்பிக்கின்றனர். தன்னை நம்பி வரும் பக்தர்களின் துயர்களைத் துடைத்து வரும் சுவாமிகள், திருமணமாகி இருபது ஆண்டுகள் கழிந்தப் பின்னரும் தனக்கு ஒரு வாரிசு உருவாகவில்லை என்ற ஏக்கத்துடன் வந்த ஒரு தம்பதியருக்குச் சுவாமிகளின் அருளினால் கரு உருவாகி ஆண் மகவு பிறக்க 'பெருமாள் சாமி'

என்று சுவாமிகளது திருநாமத்தையே குழந்தைக்குச் சூட்டி மகிழ்ந்துள்ளனர். விபத்து ஒன்றில் கால் முறிவு ஏற்பட்டு நடக்க முடியாமல் மிகுந்த வேதனைக்கு உள்ளான ஒருவர் சுவாமிகளிடம் நம்பிக்கையோடு நாடி வந்து தீர்த்தத்தை தடவி வந்த மாத்திரத்தில் கால்கள் குணமாக சுவாமிகளின் ஜீவசமாதி பீடத்தில் தூய்மைப் பணியாற்றி வருகின்றார். முன்னொரு காலத்தில், சமையல் கலையே அறியாதவரை சுவாமிகள் திருமண நிகழ்வில் சமைக்கச் சொல்லி சமைத்தப் பின் பதார்த்தங்களின் மீது விபூதியைத் தூவ சுவை மிகுந்த உணவானது. அக்குடும்பத்தினரே சுவாமிகளின் குருபூஜைக்கு பல ஆண்டுகளாகச் சொந்த செலவில் இன்றும் சமைத்து வருகின்றனர். அதுபோல் சுவாமிகள் விரும்பி உண்டது கம்பங்கூழும், கொள்ளுச் சட்னியும் தான். அதனையே சுவாமிகளின் ஒவ்வொரு குருபூஜைகளிலும் அவற்றை பிரசாதமாக வழங்கி வருகின்றனர்.


### குருபூஜை விழா

ஸ்ரீ குகைப்பெருமாள் சித்தர் சுவாமிகளின் 70வது ஆண்டு குருபூஜை விழா வரும் பங்குனி மாதம் 22ந்தேதி ஆங்கில தேதி 04.04.2024 வியாழக்கிழமை அன்று மிகச் சிறப்பாக நடைபெற உள்ளது. அதுசமயம் பக்தர்கள் அனைவரும் இந்த மகாகுருபூஜையில் கலந்து கொண்டு சுவாமிகளின் அருளாசிப் பெற்று வாழ்வில் மென்மேலும் உயர்வடைய சித்தர்கள் திருவடி சேவா அறக்கட்டளையின் சார்பாக அன்போடு வேண்டுகிறோம்.

குருநாதர் ஸ்ரீலஸ்ரீ குகைப்பெருமாள் சுவாமிகள் திருவடி சரணம்.

### ஜீவத் திருக்கோவில் அமைவிடம்

ஸ்ரீலஸ்ரீ குகைபெருமாள் சுவாமி கோவில்,
அர்த்தநாரிபாளையம், ஆனைமலை,
ஆனைமலை உடுமலைப்பேட்டை ரோடு






## 18 சித்தர் பீடம்

சித்தர்கள் திருவடி சேவா அறக்கட்டளை ஆன்மீக வழியில் எண்ணற்ற பல சேவைகளை மக்களுக்கு தொடர்ந்து செய்து வருகின்றது. குறிப்பாக ஏழை எளியோருக்கு அன்னதானம் வழங்குதல், நலிவடைந்த சித்தர் பீடங்கள் மற்றும் சிவாலயங்களுக்கு ஒரு மாதத்திற்க்கான எண்ணைய் மற்றும் பூஜை பொருட்கள் வழங்குவது, உலக நன்மைக்காவும் அமைதிக்காகவும் மற்றும் குடும்ப நல சேமத்திற்க்காவும் தொடர்ந்து அமாவாசை மற்றும் பௌர்ணமி தினங்களில் 18 சித்தர்கள் யாக பூஜை செய்துவருகிறது.

## இணையதளம் வழி ஆன்மீகம்

வருங்கால சந்ததியினருக்கு இறைவனை எளிய முறையில் அடையும் ஞானபாடங்களைத் தந்த தமிழ்ச் சித்தர்களின் வாழ்க்கை முறைகளையும் அவரது தத்துவங்களையும் இந்த மண்ணில் வாழும் மக்களுக்கு கொண்டு போய் சேர்க்க வேண்டும் என்பதற்காக www.siddhargalthiruvadi.com என்ற ஆன்மீக இணையதளம் ஒன்றை உருவாக்கி அதன் மூலம் நல்வழி ஆன்மீகத்தை போதிக்கவும். இந்த இயந்திர மாயமான வாழக்கையில் ஓடிக்கொண்டே இருக்கும் நவீன யுக மக்களை அவர்கள் விரும்பும் வழியிலேயே இந்த ஆன்மீக தத்துவத்தை கொண்டு செல்ல “Siddhargal Thiruvadi iTV” என்ற வளையொலியை தொடங்கி தமிழகத்தில் வாழ்ந்த மாபெரும் சித்த பெருமக்களின் வாழ்வியலை காணொளிகளாக தயாரித்து மக்களிடம் கொண்டு போய் சேர்த்தும் பல அறிய இறைபணிகளை கடந்த 4 வருடங்களாக செய்து வருகின்றது.

## 18 சித்தர் பீடம்

இந்த அறக்கட்டளையின் சிறந்த நோக்கமாக மிகப் பெரிய ஆலயம் நிறுவி அதில் சிவலிங்க பிரதிஷ்டை செய்து அதனை சுற்றி பிரமாண்ட யாக குண்டம் மற்றும் பதினெண் சித்தர்களுக்கான பீடங்களையும் அமைத்து உலக மக்கள் யாவரும் தமிழகம் வந்து தங்கி ஒவ்வொரு பௌர்ணமி மற்றும் அமாவாசை தினங்களில் தங்களுடைய குடும்ப பிரச்சனைகளுக்கான தீர்வுகளுக்கு தாங்களே யாக பூஜையை நடத்துவது.

இதற்காக காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு, பாண்டிசேரி போன்ற பகுதிகளில் சுமார் 2 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடங்களை தேர்வு செய்து அதில் இந்த 18 சித்தர் பீடம் அமைக்க சித்தர்கள் திருவடி சேவா அறக்கட்டளையின் சார்பில் நிதி பெருக்கி ஆலயம் எழுப்பும் இந்த அறிய பணியினை முன்னெடுத்துள்ளது.

## நித்திய அன்னதானம்

சித்தர்கள் வலியுறுத்தும் முக்கிய ஆன்மீக பணியே அன்னதானமாகும். அவர்கள் யாரும் பசியோடு இருக்கக்கூடாது என்ற கொள்கையை கொண்டிருந்தார்கள். அன்னதானம் செய்தாலே இறைவனின் அருளை எளிதில் பெறலாம் என்று சித்தர்களின் சொல் வாக்கு. இதனை சித்தர்களின் சொல்லாகவே கொண்டு சித்தர்கள் திருவடி சேவா அறக்கட்டளை தொடர்ந்து தங்களால் இயன்ற அளவு வாரம் ஒருமுறை சுமார் 100லிருந்து 200பேர்களுக்கு தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறது. மேலும் நித்திய அன்னதானம் வழங்க வேண்டும் என்பது இந்த அறக்கட்டளையின் உயர்ந்த நோக்கமாகும் அதனை செயல்படுத்த முனைப்போடு அறக்கட்டளை செயல்படுகிறது.

## கர்ம வினை தீர அன்னதானம் செய்யுங்கள்

இந்த கலியுகத்தில் மனிதர்களாகிய நாம் யாவரும் பஞ்சமா பாதகம் என்னும் பொய், களவு, சூது, கொலை மற்றும் கற்பழிப்பு எனும் ஐந்து வகையான பாவங்களில் ஏதோ ஒன்றில் அறிந்தோ அறியாமலோ செய்து வருகிறோம். இதனைத்தான் “கர்ம வினைகள்” என்கிறது புராணங்கள். கர்மாக்களை மட்டும் எத்துணை பணம் கொடுத்தாலும் நீக்க முடியாது. எல்லா கர்மாக்களிலிருந்தும் நாம் வெளி வந்துவிட முடியாது. ஒரு சில கர்மக்களை நாம் அனுபவித்தே ஆகவேண்டும். ஆனால் அன்னதானம் செய்வது, ஆலய திருப்பணிகள் செய்வது, ஆலயங்களுக்கு விளக்கேற்றுதல் போன்ற புண்ணிய காரியங்கள் செய்வதன் மூலம் ஒரு சில கர்மாக்களின் வீரியங்களை குறைத்துக் கொள்ளலாம்.

நீங்களும் இது போன்று புண்ணிய காரியங்களை மனமார செய்து உங்கள் “கெட்ட கர்மாக்களின்” வீரியங்களை குறைத்துக்கொள்ளுங்கள். சித்தர்கள் திருவடி சேவா அறக்கட்ட்ளை தொடர்ந்து இது போன்ற ஆன்மீக அறப்பணிகளை சிரமேற்கொண்டு உங்களுக்காக செய்து வருகிறது. நீங்களும் சித்தர்கள் திருவடி சேவா அறக்கட்டளையோடு இணைந்து கைகோர்த்து உறுபினராகி அறக்கட்டளை க்கு நன்கொடை தந்து பங்கெடுத்துக் கொள்ளுங்கள்.

தொடர்புக்கு

**சித்தர்கள் திருவடி சேவா அறக்கட்டளை**
+91 8438238921
siddhargalthiruvadisevatrust@gmail.com
www.siddhargalthiruvadi.com

## Importat Grupooja Dates
## முக்கிய குருபூஜை நாட்கள்
### (ஏப்ரல் 01ந்தேதி முதல் 15ந்தேதி வரை)

| தேதி | சித்தர் பெயர் | முகவரி | குருபூஜை |
|---|---|---|---|
| 02.04.2024 பங்குனி-20 | அவதூத பாம்பாட்டி சித்தர் | தண்டையார்பேட்டை சென்னை | 30வது குருபூஜை |
| 02.04.2024 பங்குனி-20 | காளிதாஸ் சுவாமிகள் | பழனி திண்டுக்கல் | 38வது குருபூஜை |
| 04.04.2024 பங்குனி-22 | தூங்கை பெருமாள் சித்தர் | ஆனைமலை கோவை | 70வது குருபூஜை |
| 07.04.2024 பங்குனி -25 | சிவ பிரபாகர சித்த யோகி | பந்தனம்திட்டா கேரளா | 761வது குருபூஜை |
| 08.04.2024 பங்குனி -26 | விவேகானந்தர் சித்தர் | ஆத்தூர் சேலம் | 12வது குருபூஜை |
| 08.04.2024 பங்குனி -26 | தோப்பா சுவாமிகள் | சைதாப்பேட்டை வேலூர் | 174வது குருபூஜை |
| 09.04.2024 பங்குனி -27 | புடலங்காய் சித்தர் | ஆடுதுறை தஞ்சாவூர் | 12வது குருபூஜை |
| 14.04.2024 சித்திரை-01 | ஸ்ரீ வீரராகவர் சுவாமி | திருவொற்றியூர் சென்னை | 62வது குருபூஜை |

*(for more details of Address, Contact Number and Google Location Map visit: www.siddhargalthiruvadi.com)*

## ஆன்மீக சுற்றுப் பயணம்

சித்தர்கள் திருவடி சேவா அறக்கட்டளை இந்திய தேசிய மற்றும் அயல்நாட்டு பக்தகோடிகள் தமிழகத்திற்கு தங்களின் ஆன்மீக சுற்றுப்பயணத்திற்கான வரும்போது அவர்களுக்கு ஒரு நல்ல ஆன்மீக வழிகாட்டியாகவும் அவர்களின் ஆன்மீக தரிசனம், பயண ஏற்பாடுகள் மற்றும் தங்குமிடம் போன்ற இதர சேவைகளையும் செய்து வருகிறது.

இந்த சேவைகள் ஆரம்பகாலகட்டத்தில் சித்தர்கள் திருவடி இணையத்தள ஆன்மீக வலைக்காட்சியின் subsribers, சித்தர்கள் திருவடி சேவா அறக்கட்டளையின் உறுப்பினர்கள் மற்றும் www.siddhargalthiruvadi.com-ஐ பின்தொடரும் இணையதள அன்பர்கள் பலர் குறிப்பாக கனடா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் யுகே நாடுகளைச் சேர்ந்த பக்தர்கள் அடிக்கடி தமிழகம் வந்து சிவ ஆலயங்கள், சித்தர்களின் ஜீவ சமாதிகள் மற்றும் வாழும் சித்தர்களின் அருமையான தரிசனத்தை பெற்றுச் செல்லும் அறிய சேவையை சித்தர்கள் திருவடி சேவா அறக்கட்டளை முழுவதும் இலவசமாகவே பக்தர்களுக்கு சேவை செய்து கொண்டிருக்கிறது.

## பங்குனி உத்திரம் பௌர்ணமி யாக பூஜை




சித்தர்கள் திருவடி சேவா அறக்கட்டளையின் சார்பாக இந்த மாதம் ஏப்ரல் 24ந்தேதி (பங்குனி உத்திரம்) பௌர்ணமி தினத்தில் உலக மக்களின் அமைதிக்காகவும் குடும்பங்களில் ஏற்படும் பணப்பிரச்சனைகள் மற்றும் மனக்குழப்பங்கள் தீரவும், தீய சக்திகளின் (Negative Energy) அதிக்கத்தை வெளியேற்றிடவும் மகா யாகபூஜை நடத்தப்பட்டது. மேலும் அவரவர்களின் ராசி, நட்சத்திரங்களுக்கேற்ப இந்த 18 சித்தர்கள் சிறப்பு யாக பூஜை தொடர்ந்து சில வருடங்களாக மிகச் சிறப்பாக நடைபெற்று வந்து கொண்டிருக்கிறது. நீங்களும் அறக்கட்டளை நடத்தும் 18 சித்தர்கள் யாக பூஜையில் தங்கள் பெயர் ராசி நட்சத்திரம் போன்ற விபரங்களைத் தந்து பூஜையில் கலந்து கொள்ளலாம். தொடர்புக்கு : +91 84382 38921

### நன்கொடை செய்ய...

| | | | |
|---|---|---|---|
| 1 வேளை உணவு | - | ரூ | 80.00 |
| 1 பாட்டில் தண்ணீர் | - | ரூ. | 20.00 |
| 1 லி பூஜை எண்ணெய் | - | ரூ. | 200.00 |
| 1 மாத அபிஷேகபொருள் | - | ரூ. | 500.00 |
| 1 செங்கல் | - | ரூ. | 30.00 |
| 1 மூட்டை சிமெண்ட் | - | ரூ. | 450.00 |

*"GOD HAS GIVEN YOU, PLENTY..... SPEND YOUR EXCESS EARNINGS*

**Your small contribution can reduce your ancient KARMA by DONATING to the TEMPLE construction**

**the proposed temple located Near by Kanchipuram in 2 Acres of land for**

# 18 SIDDHAR BEEDAM

## (with Maha Kundam)

## AND

# GREAT SHIVA TEMPLE

**You can directly do your own pooja here**






**Your Donation Bank Account Details :**

## Siddhargal Thiruvadi Seva Trust

**S.B A/c. No. : 1200 0297 8817**

**IFSC Code : CNRB 000 2874, SWIFT No.: CNRBINBB**

**Canara Bank - NIOT Pallikaranai Branch, Chennai - 600100**

**Other Mode of Payments :**

**G-Pay / Paytm No. : (+91) 8438238921**

**( You can get Income Tax Relief of your DONATION under 80G )**

Edited and Published by

## SIDDHARGAL THIRUVADI SEVA TRUST

(A spiritual Bi-Monthly e-Newsletter)